மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்
முன்னிலை – செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்
2026 ம் ஆண்டு ஜுன் திங்கள் 29 ம் நாள் திங்கள்கிழமை

**அசல் வழக்கு எண்.51/2024**

***C.N.R.No.TNVR070005772024***

-----

முத்துமாரியம்மாள், வயது சுமார் 51, க/பெ. ராமர், கதவு எண்.2/94/137, வடக்குத் தெரு, புல்லக்கவுண்டன்பட்டி, சங்கரபாண்டியாபுரம் அஞ்சல், கொம்மங்கியாபுரம், வெம்பக்கோட்டை வட்டம், விருதுநகர் மாவட்டம். .. வாதி

/எதிர் /

1) வட்டாட்சியர், வெம்பக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகம், வெம்பக்கோட்டை வட்டம், விருதுநகர் மாவட்டம்.

2) மாவட்ட ஆட்சியர் அவர்கள், விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், விருதுநகர் மாவட்டம். .. பிரதிவாதிகள்

இந்த வழக்கானது வாதியின் பாட்டி மாரியம்மாள் கடந்த 07.07.1979 ல் இறந்தார் என்று விளம்புகை செய்ய உத்தரவிட வேண்டியும், வாதியின் தாத்தா சுப்பன் செட்டியார் கடந்த 27.04.1982 ல் இறந்தார் என்று விளம்புகை செய்ய உத்தரவிட வேண்டியும், வழக்கு செலவுத் தொகை வேண்டியும், இதர பரிகாரங்கள் வேண்டியும் வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| வழக்கு தாக்கல் நாள் | 19.07.2024 |
| வழக்கு கோப்பிற்கு எடுத்த நாள் | 23.07.2024 |
| வழக்கு மூலம் | 01.08.2003, 07.07.1979, 27.04.1982, 01.04.2024, 23.03.2024, 10.04.2024 ஆகிய தேதிகளில் புல்லக்கவுண்டன்பட்டியில் வைத்து உற்பத்தி. |
| நீதிமன்றக் கட்டணம் | தாவா வழக்கின் மதிப்பு ரூ.5000/– என மதித்து அதற்கு த.நா.நீ.மு.க. சட்டப்பிரிவு 25(d))ன் படி ரூ.150/– நீதிமன்றக் கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது. |

இந்த வழக்கானது இறுதியாக என் முன்பாக 25.06.2026 அன்று விசாரணைக்காக வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. C. முத்துக்கண்ணு, அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், இதுவரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்து இருதரப்பு வாதுரை, சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**<u>தீர்ப்பாணை</u>**

1) வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது.

2) செலவுத் தொகை குறித்து எவ்வித உத்தரவும் இல்லை.
(இருதரப்பிலும் செலவுத் தொகை பட்டியல் தாக்கல் இல்லை)

2026–ஆம் ஆண்டு ஜுன் மாதம் 29–ஆம் நாள் என் கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டுள்ளது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சாத்தூர்.
அசல் வழக்கு எண். 51/2024
தீர்ப்பாணை
நாள் – 29.06.2026.